www.padippakam.com

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
# ඊලම් ජනතා විප්ලවවාදී විමුක්ති පෙරමුණ
# EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

நோர்வே

வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு....

கடந்த 19.06.90 செவ்வாய் மாலை ஏழு மணியளவில் சென்னை - கோடம்பாக்கம் பகுதியிலுள்ள வீடொன்றில் இலங்கையின் தற்போதைய நிலை குறித்தும் தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலத்திலிருந்து அவர்களை மீள்விப்பது குறித்துமான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் மேற்கொண்டனர்.

இந்த நேரத்தில் அவ்விடத்துக்கு கொலைவெறியுடன் இயந்திரத்துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் சகிதம் வாகனம் ஒன்றில் வந்து இறங்கிய புலி இயக்கத்தினர் ஐவர் நிராயுதபாணிகளான எம் தோழர்கள் மீது நடத்திய கோரத்தாக்குதலில் :-

முன்னணியின் செயலதிபர்

தோழர் பத்மநாபா

வடக்கு-கிழக்கு மாகாண நிதியமைச்சர்

தோழர் கிருபாகரன்

வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்

தோழர் யோகசங்கரி

மற்றும்

தோழர் ரவி
தோழர் லிங்கன்
தோழர் பத்மநாதன்
தோழர் கோவலராஜா
தோழர் மொஸ்கோ
தோழர் கமலன்
தோழர் அன்புமுகுந்தன்
தோழர் புவிநாதன்
தோழர் ரமணன்

பெண்தோழர்களான
தோழர் கவிதா
தோழர் யசிந்தா

ஆகியோரும் 3 பொது மக்களும் கொல்லப்பட்டதுடன் மேலும் 15 பேர் காயமடைந்த செய்தியை ஆழ்ந்த துயருடன் அறியத் தருகிறோம்.

இலங்கையில் அப்பாவித் தமிழ்பேசும் மக்களை ஆயிரக்கணக்காக சிறீலங்கா படைகளுக்கு பலிகொடுத்து புலிகள் தப்பி ஓடி காடுகளுக்குள் ஒழிக்கும் இவ்வேளையிலும் தமது இரத்தவெறி அடங்காது இந்திய மண்ணில் புலிகள் நிகழ்த்திய இந்த வெறியாட்டத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சமாதனத்தின் பகைவர்களை நிர்மூலம் செய்வோம்.

20-06-90

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி
(பிரான்சுப் பிரிவு)

படிப்பகம்